விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 14 றம்ழான் 18 இதழ் 106

யாழ்ப்பாணம் புதன்கிழமை 28 5-1986

## 'நிலைமை சீராகும்வரை தபாலகத்தை இடம்மாற்றுக'

### யாழ். தபால் ஊழியரின் மகஜர் கூறும் நிபந்தனைகள்

[யாழ்ப்பாணம்)

நிலைமை சீராகும்வரை பாதுகாப்பான புதிய சூழலில் வசதியான கட்டிடத்தில் தபால் கந்தோரைக் திறக்க முயற்சிக்குமாறு மீண்டும் வேண்டுகிறோம். அங்கு வேலைக்கு வருவதாக நாங்கள் உறுதியளிக்கின்றோம்.''

யாழ். தபால் கந்தோர் ஊழியர்கள் நேற்று யாழ். பிரதம அஞ்சல் அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''தங்கள் நிர்வாகமும், ஊழியர்களாகிய நாங்களும் இம்மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 26-ம் திகதி திங்கட்கிழமையாகிய நேற்று வரை ஒன்பது நாட்களாக எங்கள் வேலைத் தலமாகிய யாழ்ப்பாணம் தபாற்கந்தோரினுள் செல்ல முடியாதவர்களாகிறின்றோம்.

யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்கு வேலைக்கு வருமாறு விதிக்கப்பட்ட தங்கள் ஆணையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

அரசபடைக்கும் போராளிகளும் யுத்தநிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி ஓயுபோது தபாற்கந்தோருக்குரிய வீதிகளும், முன்பக்க வாயில்களும் பாதுகாப்பானதென உறுதியாகும் போது,

(6-ம் பக்கம் பார்க்க)

### அதிரடிப் படை சுட்டு

# முஸ்லிம் வர்த்தகர் உட்பட மூவர் பலி; மூவர் நிலை ஆபத்து

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
28-5-1986
PERIODICALS DIVISION

## கல்குடா எங்கும் துக்கம்

(மட்டக்களப்பு)

கார் ஒன்றில் சென்றுகொண்டிருந்த முஸ்லிம் வர்த்தகரும் மற்றும் இருவரும் அதிரடிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஸ்தலத்திலேயே பலியானர்கள். மூவர் படுகாயமுற்றனர்.

நேற்று முன்தினம் இரவு கல்குடாத் தொகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

முஸ்லிம் வர்த்தகரின் கடையில் திருடிக்கொண்டு தலைமறைவான வேலையாட்களை தேடிப்பிடிக்கும் முயற்சியின் போதே இவர்கள் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்கானர்கள்.

கார்சாரதி பண்டா (35 வயது), சலீம்(25 வயது), இஸ்மாயில் (45 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

அன்சார் [26 வயது], ஹுசைன் [26 வயது], சலீம் [35 வயது], ஆகிய மூவரும் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடுகள் பட்டதால் ஏற்பட்ட சேதங்களுடன் வாடகைக்கார் அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனையைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகரின் கடையில் இருந்த வேலையாள் ஒருவர் ரொக்கப்பணத்தை திருடிக்கொண்டு தலைமறைவானதாகவும் அவரை ஓட்டமாவடி

(6-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு

[மட்டக்களப்பு]

முன்னெருபோதும் இல்லாத வகையில் மட்டக்களப்பு நகரின் நாலாபுறங்களிலும் மற்றும் கிராமப் புறங்களிலும் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணி வரை பலத்த சத்தத்துடன் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தவண்ணமிருந்தன.

குண்டுகள் வெடித்த அதிர்ச்சியினால் ஆத்திரமடைந்த ஆயுதப்படையினர் நேற்று வீதிகளில் சென்றவர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கடமைக்குச்சென்ற மாநகரசபைத் தொழிலாளியான தயபியப்பா [45 வயது) என்பவர் படுகாயமுற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து பாக்கு நீரிணைவழியாகத் 'தமிழீழவிடுதலைப் புலிகள்' இயக்கதின் மட்டக்களப்புப் பிராந்தியத் தலைவர்லெப்டினன்ட்கேர்ணல் அருணவும் மற்றும் போராளிகளும் வடபகுதிநோக்கி வந்த இயந்திரப்படகு நேரடி மோத

(6ம் பக்கம் பார்க்க)

## "தபால் பொதிகளை யாழ். அனுப்பாதீர்"

[வவனியா]

பிற மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு அனுப்பட்ட பெருந்தொகையான தபால்கள் வவனியா தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இதேவேளை யாழ். தலைமைத் தபாலகம் தற்போதைக்கு இயங்க முடியாத நிலைமையில் உள்ளமையினால் இத்தபால்களை இங்கு அனுப்பி வைக்க வேண்டாமென யாழ். தபாலதிபர் வவனியா தபால் அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இந் நிலையில் யாழ். தபால் நிலையநிலைமை சீரடையும் வரை இத்தபால்களைத் தரம் பிரிக்கும் வேலைகள் யாவும் வவனியாவிலேயே நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. [ரா]

## மூதூரில் இருவர் பலி

[திருகோணமலை]

மூதூர் நகரில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

பலியான இருவருள் ஒருவர் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் சிங்களவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாதவர்களே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலீடுபட்டதாகக் கூறப்படுகிறது. [மா]

### பருத்தித்துறையில்

## மூன்று இராணுவம் பலி: அதிகாலையில் பரபரப்பு

[யாழ்ப்பாணம்]

நேற்று அதிகாலையில் இராணுவம் முகாமைவிட்டு வெளியேற முயன்றபோது போராளிகளுக்கும் - இராணுவத்தினருக்குமிடையே மோதல்கள் நடந்தன என அறியப்படுகின்றது. இராணுவ தரப்பில் மூன்று பேர் பலியாகியிருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

இச்சம்பவத்தால் ஒரு சில மணித்தியாலயங்கள் நகர் அமைதியிழந்து காணப்பட்டது. (த)

## பயங்கரவாதத்தை ஒழிக்க கிரேக்கம் உறுதி

[கொழும்பு]

இலங்கையின் இறமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிப்பாதுகாப்பதற்கும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் கிரேக்க அரசுதனலான உதவிகளைச் செய்யும்.

இலங்கை வெளிநாட்டுப் பிரதிஅமைச்சர் திரு டிரோன் பெர்ணண்டோவுக்கு கிரேக்க வெளிநாட்டமைச்சர் ஹரோ

[6ம் பக்கம் பார்க்க]

## மெக்ரொக் - சிவ்சங்கர் சந்திப்பில் இலங்கைத்தமிழர்

(புதுடில்லி)

உத்தியோக பூர்வ விஜய மொன்றினை மேற்கொண்டு புதுடில்லி வந்துள்ள பிரிட்டிஷ் எதிர்கட்சித்தலைவர்திரு மெக்ரொக் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு சிவ்சங்கரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையின் போது இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரா)

### காரைநகர் ஊடாக தீவுப்பகுதிக்கு

## உணவு பொருள்கள் இன்றும் நாளையும் எடுத்துசெல்லலாம்

(நெடுந்தீவு)

காரைநகர் ஊடாகத் தீவுப் பகுதிக்கு உணவுப்பொருள்களை எடுத்துச்செல்ல விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீவுப்பகுதியில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உணவுப்பொருள்களை எவ்வாறு எடுத்துச்செல்லலாம் என்பதுபற்றி யாழ் செயலகத்தில் ஆராயப்பட்ட மாநாட்டின்போது பாதுகாப்புப் படையின் இணைப்பதிகாரியுடன் யாழ். அரசாங்க அதிபர் இதுவிஷயமாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது காரைநகர் ஊடாக ஊர்காவற்றுறைக்கு உணவுப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது

உணவுப்பொருள்களை இன்று புதன்கிழமையும் [illegible] வியாழக்கிழமையும் மட்டுமே எடுத்துச்செல்ல முடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் - ஊர்காவற்துறை ஏற்றி இறக்கல் வேலையை ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் பொறுப்பேற்றுச் செய்து தருமென்றும் அதற்கான செலவை ஏனைய தீவுப்பகுதிச்சங்கங்கள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது-

அரிசி, மா, சீனி ஆகியவற்று [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கச்சேரிக்கு இன்று அகதிகள் ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அகதிக் குடும்பங்கள் இன்று காலை பத்து மணிக்கு யாழ். அரசஅதிபர் பணிமனையை நோக்கி ஊர்வலமொன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி முகாமிற் தங்கியிருந்த அகதிக் குடும்பங்கள் தொற்று நோய்களின் காரணமாக முகாமைவிட்டு வெளியேறி உறவினர் வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருப்பதாகவும் இதனால் இக்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 அறைகள் கொண்ட வீட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: Mrs. L. Thangarajah, 14/12, Ark Lane, Uduvil. [C2523]

பாவிக்கப்படாத புதிய கைக் கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள் (Rnytham, Seiko made), Molinex Grinder Set, National B/W T.V 17'' என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ''ஸ்னேக்கா வீடியோ மன்சில்'', இல 1, நவீன சந்தை, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (C2537)

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில், காங்கேசன்துறை வீதியில் புதிய வீடு சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. மகாலிங்கம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர். (C2539)

கச்சேரி-நல்லூர் ரோட்டில் ஆசீர்வாதப்பர் வீதியில் கிணறு மற்றும் வசதிகளுடன் புதிய வீடும், ஒரு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K. L செல்லத்துரை, 20/1, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர். [C2545]

சாவகச்சேரி சந்தை, வைத்தியசாலை, பாடசாலைக்கு அண்மையில் 1½, 2 பரப்புக் காணிகளில் இரண்டு வீடுகள் கிணறு, மலகூடம், மின்சார வசதிகளுடன் விற்பனைக்குண்டு. சையூம் மாஸ்டர், 106B, டச்சு வீதி, சாவகச்சேரி. [C 2535]

## தேவை

ஒருவரின் சொந்த பாவிப்பில் உள்ள நல்ல நிலையான வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) தேவை. விபரங்கட்கு: 3, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம். (C2528)

## வாடகைக்கு

தகரப்பந்தல்கள் அழகானவை புதியவை கலியாண முதலிய வைபவங்களுக்கு குறைந்த வாடகையில் முன்பதிவாகின்றன. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். 'சீக்கோ' கே. கே. எஸ். வீதி, தாவடிச்சந்தி, கோண்டாவில். [C 2183]

## தவறிவிட்டது

எனது வங்கி பாஸ்புத்தகம் 200 ஸ்ரேலிங் பவுணுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். எஸ். மயில்வாகனம், 493, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (A 2519)

25-05-1986ந் திகதி ஞாயிறு மாலை 4 00 — 4 30 மணிக்கு இடையில் சுழிபுரத்துக்கும் சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கும், சித்தங்கேணிச் சந்திக்கும், பண்டத்தரிப்புச் சந்திக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை, பாஸ்போட் அளவிலான எட்டு போட்டோக்கள், முத்திரை அளவிலான போட்டோ, முக்கிய தஸ்தாவேஜுகளும் தவறியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்க. தகுந்த சன்மானம் வழங்கப்படும். 'துர்க்கா கோல்ட் கவுஸ்', பிரதான வீதி, பண்டத்தரிப்பு. [C2538]

## வகுப்புகள்

ரேடியோand ரீ.வி (டெக்,) வெல்டிங், வீட்டு வயறிங், வாகனங்களுக்கான வயறிங், மோட்டார் மெக்கானிசம், நீர்க்குழாய்கள் பொருத்துதல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதியவகுப்புகள் 31-05-86, 01-06-86 இல் ஆரம்பமாகின்றன. முதலிற் சேருபவருக்குக் கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. VISPA ENGINEERING 328, தாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C2536]

## கல்வி

''பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1986'' க.பொ.த[சா.த] குறைந்த தகைமை. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். தபால் சீராக அமையாத காரணத்தினால், விண்ணப்பமுடிவு திகதி 06-06-1986 வரை நீடிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டுக்கு வெளியில் வசிப்போர், சனி ஞாயிறு தினங்களில் வர வசதியற்றோர் தபால்வழியாகவும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [C 2524]


# பிரயாண ஒழுங்கு

## டென்மார்க்

★ அபுடாபி (Labour)

★ லிபியா (Labour)

★ சிங்கப்பூர் பணிப்பெண்கள் முதலிய பிரயாண ஒழுங்குகள் உடனடியாக செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க் பிரயாணிகளை எமது முகவர் 30-ம் திகதி அழைத்துச் செல்வார். உடனடியாகதொடர்பு கொள்ளவும்.

## யூனிவேசல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
(பெற்றோலியம் கூட்டுத்தாபன அத்தியடிச்சந்தி ஆயுள்வேதக் கல்லூரி அருகாமை) யாழ்ப்பாணம்.
A 708


செங்களம் ஆடியோர் இறப்பதுமில்லை! செத்தவர் அவரை மறப்பதுமில்லை!!

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



சிங்காரவேல் செல்வகுமாரன்
(வேங்கை- கப்டன் லிங்கம்)

உற்பவம்: 16-12-1960

நற்பதம்: 29-04-1986

துங்கக்குமரன் உறைதொண்டமானாறைத் தாய் மண்ணாகவும் வீரத்தின் விளைநிலம் வல்வெட்டித்துறையைத் தந்தையர் நிலமாகவும்கொண்டு திரைகடல் ஓடித் திரவியம் தேடியோர் வழியில், ஊருயரப் பணிபுரியும் உயர்ந்தோர் குடியில், படித்தோர் குடும்பத்தில் பிறந்து, ஆசிரியத்தாய் அரவணைத்து உணவோடு இனவுணர்வும் ஊட்ட வளர்ந்து யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரிகளில் பயின்று படிப்பிற் சிறந்த மாணவனுய்- பண்பில் உயர்ந்த மானிடனுய்- பாசம் நிறைந்த மைந்தனுய்-பரிவு மிகுந்த உடன்பிறப்பாய்-உற்றூர், உறவினரின் உண்மை அன்பனுய்- நட்டார்க்கு இனிய நண்பனுய்- ஊருக்குதவும் உயர்ந்த தொண்டனுய்- கன்னற்றமிழின் காதலன்பனுய்-தாய்கைவிலங்கதைத் தகர்க்கின்ற தனயனுய்-பயிற்சியால் உயர்ச்சியும் பெற்ற போர்மறவனுய்-தீரம் மிகுந்த ஓர் தியாக அணியில் திறமை மிகுந்தபிரிவுத்தலைவனுய்-களம் 'பழம்' என்று கொண்டு களம்பலகண்ட இளம்புலியாய் வாழ்ந்து. வெஞ்சமர்க்கஞ்சியோர் வஞ்சகத்தில்வீழ்ந்து 'வரலாறு' ஆகிவிட்ட எங்கள் அன்புச் செல்வத்தின் மரணச்சடங்கையியல்கலந்து மரியாதை சேர்த்த அவர் அணியினர்க்கும், 30-04-1986ல் நிகழ்ந்த இறுதிக்கிரியைகளில் இணைந்து கௌரவித்தவர்கட்கும், நேரில்வருகை தந்தும், அன்புமடல் தீட்டியும் ஆறுதல்தந்தி நீட்டியும் எம் ஆருத்துயரம் பகிர்ந்தவர்க்கும் இதயக் கனிவான நன்றிகளை இத்தால் உரித்தாக்குகின்றோம். அன்னவர்க்கு 29-05-1986 (வியாழன்) அன்று வல்வையில் நிகழவுள்ள அந்தியேட்டிக் கிரிகைகளில் பங்கெடுத்துச் சிறப்பிக்க அன்புள்ளார், ஆர்வலர் அனைவரையும் அன்புரிமைதழுவ அழைக்கின்றோம்.

சிங்காரவேல் குடும்பத்தினர்,
வல்வெட்டித்துறை.
[C2542]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பொன்னம்மா சந்திரசேகரர்

தோற்றம்: 02-02-1902
மறைவு: 28-05-1985

வைகாசி உத்தராயனம் பகலவேளை சுக்கில பட்சத்தில் மீளா வழியிற் சென்று பிரமத்தை அடைந்த எமது அன்னையே! என்றும் எங்கள் ஒளிவிளக்காக விளங்கி, அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்ம சாந்திக்காகஇறைவனை இறைஞ்சுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
'ஒச்சாட்',
கைதடி. (C 2544)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கந்தையா செல்லமுத்து

மாந்தருடன்: 22-08-1917

மாதேவனுடன்: 28-05-1985

உங்கள் மறைவால் யான் அடையும் வேதனை என் மறைவன்றே நீங்கும் அம்மா!

பி. கே. பாலசிங்கம்.
718, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். C 2534

## அறிவித்தல்

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
வட்டுக்கோட்டை

புதிய கல்வி ஆண்டு 86/87 வகுப்புக்களுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் நேர்முக பரீட்சைக்காக இன்று 28-5-86 புதன் காலை 9 00 மணிக்கு காரியாலயத்தில்சமுகம் அளிக்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

A-691 Director.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி சேதுபதி நாகம்மா
(நெடுந்தீவு-4)

தோற்றம்: 14-09-1923
மறைவு: 30-04-1986

'உம் உயிர் உள்ளவரை எமக்காக வாழ்ந்தீர் எம் உயிர் உள்ளவரை உமை நாம் மறவோம்' 30-04-1986-ல் சிவபதமடைந்த திருமதி சேதுபதி நாகம்மா அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் 30-05-1986 வெள்ளிக்கிழமை நெடுந்தீவிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உறவினர், நண்பர்கள், அனைவரும் கலந்து பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம். இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பலவழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கணவன்: சு. சேதுபதி [இளைப்பாறிய கிராம சேவை அலுவலர்]
பிள்ளைகள்: ஜீவரத்தினம் [கிராம சேவை அலுவலர், வன்னேரிக்குளம் கிளிநொச்சி], தருமரத்தினம் [சவுதி அரேபியா], நிர்மலரத்தினம் [சவுதி அரேபியா], அமிர்தராணி, சந்திரராணி, மற்றும் தாய், சகோதரங்கள், மருமக்கள், பேரன், பேத்தி, உற்றார், உறவினர்கள்.

C 2491

## இயந்திர இயக்கப்பயிலுநர் தேவை

யாழ். பிராந்தியத்திலுள்ள பாரிய தொழிற்சாலைக்கு இயந்திர இயக்கப் பயிலுநர் உடனடியாகத் தேவை. தகைமையும், திடகாத்திரமுமுள்ளவர்கள் இவ்விளம்பரம் வெளியிடப்பட்டு மூன்று தினங்களுக்குள் தபால்மூலமாகவோ அன்றி நேரடியாகவோ தங்கள் விண்ணப்பத்தை கையளிக்கவும்.

விளம்பர இல: C 2542

மே/பா. ஈழநாடு.
மானிப்பாய்ரோட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

உயர்ந்த லட்சியத்துக்காக இடைவிடாது உழைப்பதில்தான் ஒருவன் உயிர் வாழ்வதன் பெருமை முழுவதும் தங்கியிருக்கிறது.

— பெர்னுட் ஷா

# நமது நோக்கு

## சத்தங்கள் ஓய்ந்தாலும் விமானங்கள் மீண்டும் 'வரலாம்!

தரைப்படைகளின் அணிவகுப்பு, சப்பல்களின் சங்கநாதம், வானத்தில் விமானங்களின் சாகசம்.

இவ்வாறு தம்மை உஷார்படுத்திக்கொண்டு ஆயுதப்படையினர் வடக்கில் நடத்திய போர் நடவடிக்கைகளின் பேரிரைச்சல் கடந்த இரண்டு தினங்களாக சற்று ஓய்ந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் குண்டுச் சத்தம் நாம் இதனை எழுதிக்கொண்டிருக்கும் வேளைவரை ஓய்ந்துள்ளது. தொடர்ந்தும் இந்நிலை நீடிக்க வேண்டுமென்பதே எமது விருப்பம். ஆனல் நாம் விரும்புவதுபோல் எதுவும் நடந்து விடுவதில்லையே!

கடந்த 17ம் திகதி ஆரம்பமான உக்கிரமமான போர் நடவடிக்கைகளை இந்திய அரசின் உயர் ஸ்தானிகர் திரு டிக்ஸிற் ஜனதிபதியைச் சந்தித்துப்பேசிய பிறகும் கூட ஆயுதப்படைகள் நிறுத்தவில்லை. தமிழ்ப் பொது மக்கள் மீது நடத்தப்படும் கண் மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்தாத பட்சத்தில் இந்திய அரசு மேற்கொண்டுள்ள சமாதான நல்லெண்ண முயற்சிகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என இந்திய உயர் ஸ்தானிகர் அறிவித்த அதேவேளை, போராளிகள் தாக்குதல்களை நிறுத்தாத வரை அரசு நடவடிக்கைகளை நிறுத்துவது சாத்தியமில்லையென்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்ததாக செய்திகள் கூறின.

இதே சமயம் இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு காணும் முயற்சி வேண்டாம் என்றும், அமைதித் தீர்வு காண்பதற்கான இந்திய உதவியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு இலங்கை அரசிடம் வலியுறுத்தியிருப்பதாக இந்தியவானொலிச் செய்தியொன்று கூறியது. வேறு செய்திச் சேவைகளில் அமெரிக்காவின் மேற்படி வலியுறுத்தல் ஊர்ஜிதப்படுத்தப்படாவிடினும் இச் செய்தியில் உண்மையில்லாதிருக்கமுடியாது.

தமிழ்க் கிராமங்கள் மீதும், வடக்கின் தலைநகர் மீதும் வானிலிருந்து மூர்க்கத்தனமாக குண்டு வீசித் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆயுதப் படையினரின் செயல்கள் திடீரென ஓய்வடைந்தமைக்கு இதுவும காரணயாயிருக்கலாம். இந் நிலை எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் எனச் சொல்ல முடியாது. எனவே எந்த மோசமான நிலைமையிலும் தம்மைத்தாம் பாதுகாத்து சமாளித்துக் கொள்வதற்கு மக்கள் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

யாழ் குடாநாட்டில்ஆறு நாட்களாக நடந்தபோர் நடவடிக்கைகளில் பெரும்பாலும் விமான, ஹெலிகொப்டர் தாக்குதல்களினுலும் ஷெல் வீச்சுக்களினுலும் ஏறத்தாழ 90 பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண பிரஜைகள்குழு கருத்துவெளியிட்டிருக்கின்றது.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த ராணுவ நடவடிக்கைகளின்போது ஒரே ஒரு பொதுமகனும், 30 தீவிரவாதிகளும், 2 ராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகக் கொழும்பில் ராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இரு தரப்பிலும் வெளியிடப்படவில்லை.

எதுவாஞலும் தமிழர் பிரச்னைக்கு ராணுவத் தீர்வுதான் வழி என ஒரு நிலைப்பாட்டை அரசு எடுக்கும் போது, அந்த நிலைப்பாடு தமிழருக்கெதிரானதா அல்லது தமிழருக்காகப் போராடும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கெதிரானதா எனக் கூறுவதில்லை. உண்மையில் தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஒரு தீர்வு எனக் கூறுவதாயின் நிச்சயமாக ராணுவத் தீர்வு என்ற நிலைக்கு எந்த அரசும் போகமுடியாது. ஆனல் தமிழ்மக்கள் வேறு, அவர்களுக்காகப்போராடும் இளைஞர்கள் வேறு எனப் பிரித்துப் பார்க்க முடியாத நிலையில் கண்மூடித்தனமாக விமானத்திலிருந்து குண்டுகளை வீசி இராணுவத் ''தீர்வொன்றைத் தமிழருக்கு வழங்குகின்றேம்'' எனக்கூறுவதாயின் அதனை ''இனப்படுகொலை'' என்று வர்ணிப்பதே பொருத்தமானது.

இந்த நிலையை அமெரிக்க மக்கள் இப்பொழுது புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளார்கள் என்று சொல்ல இடமுண்டு. அதன் பிரதிபலிப்பே ராணுவத்தீர்வுக்கான முயற்சியைக்கைவிடுமபடியான அமெரிக்க அரசின் வலியுறுத்தல் எனலாம்.

இந்த நிலைமையில் வீண் பிடிவாதங்களைக் கைவிட்டு தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகளை திறந்த மனதுடன் வழங்குவதற்கு இலங்கை அரசு முன்வருவதே பொருத்தம்.

அதற்கான உத்தரவாதம் இருப்பின் இந்திய அரசின் நல்லெண்ணம் உறுதியாக செயற்படமுடியும்.

ஏனெனில் இந்த விடயம் தொடர்பான சகல துருப்புச் சீட்டுக்களும் இப்போது இந்தியாவின் கையிலேயே உள்ளன.

## தொண்டமனுறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ் கல்வித்திணைக்கள அனுசரணையுடன் தொண்டமனுறு வெளிக்கள நிலையம் நடாத்தும் 1986ம் ஆண்டுக்கான யாழ் மாவட்டப் பொதுப்பரீட்சை யூலை மாதம் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானம், கணிதம், கலை வர்த்தகம் ஆகிய சகல பாடங்களிலும் ஆண்டு ஏழுவகுப்பு முதல் ஆண்டு பதினென்று வகுப்புவரையிலான சகல மாணவர்களுக்கும் பரீட்சை நடத்தப்படும்.

மேற்கூறிய வகுப்புமாணவர்களுக்கான இப்பரீட்சை யூலை மாதம் 17ம் 18ம் திகதிகளில் அறிமுறைப் பரீட்சையாகவும் 10ம், 11ம், 14ம், 15ம், திகதிகளில் செயல் முறைப் பரீட்சையாகவும் நடாத்தப்படும்.

இந்த இரண்டாந் தவணைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமதுவிண்ணப்பங்களை யூன்மாதம் 6ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

க. பொ. த. உயர்தர ஆண்டு 12 முதல் 13ம் வகுப்பு மாணவர்களுக்காக விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடாத்தப்பெறும்.

யூலைமாதம்11ம் திகதிஆண்டு 13ம வகுப்புக்கும், யூலை 14 முதல் 22ம் திகதிவரை ஆண்டு 12 வகுப்புக்கும் பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் யூன் 6ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு தொண்டமானுறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சை சபையினர் வேண்டுகின்றனர். இவைபற்றிய அறிவித்தல்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [ஐ]

## முகாம் முன்பாகவுள்ள வீடுகள் தகர்ப்பு

[வல்வெட்டித்துறை]

வல்வை ராணுவமுகாமுக்கு முன்பாகவுள்ள சில வீடுகளை ராணுவத்தினர் குண்டுவைத்துத் தகர்த்து வருகின்றனர். கடந்த இருநாட்களாக இது நடைபெறுகிறது.

இதனிடையே வல்வையில் குண்டுவீச்சினல் பாதிக்கப்பட்ட மின்கம்பங்கள் நேற்று மாற்றியமைக்கப்பட்டன.

## 40பேருக்கு தொழு நோய் அறிகுறி

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் பகுதியில் அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் சுமார் 40 பேருக்குத் தொழுநோயின் ஆரம்ப அறி குறிகள் ஏற்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தொழு நோயினல் பாதிக்கப்பட்டிருக்கும் சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலும் அதனை அடுத்துள்ள வறுத்தோலை, குடாக்கனை, பாண்டுவெட்டை, ஆகிய இடங்களிலும் கடந்த வாரம் இரு தினங்களாக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை சேர்ந்த டாக்டர் எஸ். சிவராசா, தொழு நோய்க்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர் திரு. கே. குணரத்தினம், ஓய்வுபெற்ற தொழு நோய் சுகாதார பரிசோதகர் திரு. எம். விஜயசுந்தரம், யாழ் பிரதேச சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கந்தசாமி, சுழிபுரம் சுகாதார பரிசோதகர் திரு. ஏ. ஜே. நாகலிங்கம் சங்கைக்குரிய சகோதரி பேர்டினட் ஆகியோரும் மற்றும் பண்டத்தரிப்பு, தொல்புரம், சுழிபுரம், சத்தியக்காடு பகுதிகளின் குடும்ப நல சேவையாளர்களும், சுகாதார தொண்டர்களும் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

## தொலைத்தொடர்பு சேவை துண்டிப்பினல் மக்கள் பாதிப்பு

### சங்கச் செயலாளர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ். பிரதம அஞ்சல் அலுவலகம் செயற்பட்டால் தான் யாழ். மாவட்டத்தின் அஞ்சல்சேவை, தந்திச்சேவை ஏனைய மாவட்டங்களுடன் தொடர்ந்து செயற்பட முடியும். தற்போதைய சூழ்நிலையில் கடந்த சில நாட்களாக அஞ்சலகத் தொலைத் தொடர்புச்சேவை துண்டிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.''

இவ்வாறு இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வி. என். தங்கவடிவேல் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அஞ்சல்தொலைத் தொடர்பு யாழ் மாவட்டத்தில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''கடந்த பல மாதங்களாக அடிக்கடி இப்படியான சூழ்நிலை ஏற்பட்டு வருவதை ஆராயுமுகமாக மாகாண அஞ்சல் அத்தியட்சர், மாவட்ட அஞ்சல் அத்தியட்சர், யாழ் பிரதம அஞ்சல் அத்தியட்சர் ஆகியோருடன் தொழிற் சங்கப் பேச்சுவார்த்தை நடந்து விரைவானதும் பாதுகாப்பானதுமான மாற்று நடவடிக்கை எடுக்கப்படுமென நிர்வாகம் ஊழியர்களுக்கு உறுதியளித்தது. பின்னர் அஞ்சல அத்தியட்சர் பிரிவு மட்டும் இடம் மாற்றப்பட்டது ஆனல் நூற்றுக்கும் அதிகமான ஊழியர் இன்னும் பாதுகாப்பற்ற நிலையில் சேவை செய்கின்றனர். வேறு கட்டிடங்கள் பார்க்கப்பட்டும் அதற்கான நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

''அண்மை நாட்களில் யாழ். நகரில் ஏற்பட்டுள்ள உயிராபத்து சூழ்நிலை காரணமாக யாழ் அஞ்சலலுவலக ஊழியர் தமது நாளாந்தக் கடமையினை அதே இடத்தில் செய்ய முடியாததனல் அரச ஊழியரும் பொதுமக்களும் பெரிதும் கஷ்டப்படுவதுடன் யாழ். மாவட்ட பொதுமக்களின் அஞ்சலக மூலமானஓய்வூதியக்கொடுப்பனவு உட்பட பல முக்கியமான சேவைகள் ஸ்தம்பித்துள்ளன.

''அஞ்சல் தொலைத் தொடர்பு ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை தெளிவு படுத்தி யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ் பிரதம அஞ்சல் அத்தியட்சகருக்கும், யாழ். பிரதம அஞ்சல் அதிபருக்கும், அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சருக்கும் விண்ணப்பம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.'' [ஐ]

## மானிப்பாய் கல்வி வட்டார ஜூன்மாத விடயங்கள்

(உடுவில்)

மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையே ஜூன்மாதத்தில் நடைபெற வேண்டிய விடயங்கள் குறித்து மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

பண்ணிசைப்போட்டிகள் பாடசாலைநிலையிலான கல்வி கண்காட்சி, சேவைக்கால பயிற்சிகள், ஆங்கில தினப் போட்டிகள் நடைபெறும் தினங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளன.

வட்டார ரீதியிலான பண்ணிசைப் போட்டிகள் ஜூன் மாதம் 27ம் திகதி உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை ரீதியிலான கல்விக் கண்காட்சிகளை ஜூன் மாதம் 16ம் திகதிக்கும் 23ம் திகதிக்கும் இடையில் பின்வரும் பாடசாலைகள் நடாத்துமாறு கேட்கப்பட்டுள்ளன ஜூன் 16ம், 17ம் திகதிகள் ஏழாலை, சுன்னுகம் வலயபாடசாலைகள். ஜூன் 18ம், 19ம் திகதிகள மானிப்பாய், நவாலி வலய பாடசாலைகள். ஜூன் 20ம், 23ம் திகதிகள் உடுவில் வலய பாடசாலைகள்.

ஆங்கிலதினப் போட்டிகள் வட்டாரரீதியில் ஜூலை மாதம் 4ம், 5ம் திகதிகளில் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

ஆண்டு 5ல் விஞ்ஞான பாடபயிற்சி வகுப்புகள் ஜூன் 24ம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## பைகளில் புத்தகமா? தடை!

(கொழும்பு)

கடந்த வாரம் கொழும்பு றேயல் கல்லூரியில் இடம் பெற்ற குண்டுப் புரளியை அடுத்து கொழும்பில் மாணவர்கள் பைகளில் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சிறிய வகுப்பு மாணவர்கள் 'ஷொப்பிங் பாக்கு'களில் மட்டுமே புத்தககங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பெரிய வகுப்பு மாணவர்கள் தம்முடைய புத்தகங்களை வெறுமனே எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் அறி[illegible]விக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பஸ்களில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வா]

## மண்டைதீவு மினிமுகாம்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு இராணுவ மினி முகாமுக்கு ஹெலிகொப்டர் மூலம் பொருள்கள் வந்துசேர்ந்தன என்றும் பின்பு அவை அங்கிருந்து வாகனங்களில் இராணுவ முகாமுக்கு எடுத்து வரப்பட்டதாகவும் தெரிய வருகிறது. [ஐ]

## பால் கொள்வனவு நிலயம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாக அரசாங்க அதிபர் திரு ஜெயநாதனின் முயற்சியால் 'மில்க்செட்' எனப்படும் ஸ்தாபனம் ஒன்று பல லட்சம் ரூபா முதலீட்டில் பால் கொள்வனவு நிலையம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.

கிளிநொச்சிபழையகொலனி எனப்படும் கணேசபுரத்தில் இப் பால் கொள்வனவு நிலையத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் தெரிவித்தார்.

'மில்க்செட்' நிறுவனம் கிளிநொச்சியில் பாலைக் கொள்வனவு செய்து கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யும் எனவும் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்கு முகமாக கிளிநொச்சியில் உள்ள சாதாரண இன மாடுகளுக்கு செயற்கைமுறை கருத்தரிக்கும் ஊசி ஏற்றவும் மேற்படி நிறுவனம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிலிப்பைன்ஸில் பெப்ரவரிமுதல்—

# அக்கினோ ஆட்சியில் 800பேர் மோதல்களில்பலி!

மணிலா, மே 27.

**திருமதி கொரஸோன் அக்கினோ பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக கடந்த பெப்ரவரி மாதம் பதவி யேற்றது முதல் சுமார் 800 பேர் அந்நாட்டில் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கெரிலாக்களும் இராணுவத்தினருமே இத் தொகையினரில் அதிகமானவர்களாவர் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.**

கடந்த வாரம் பிலிப்பைன் ஸின் புதிய மக்கள் இராணு வம் கம்யூனிஸ்ட் படையின் 20 கெரிலாக்களை பிலிப் பைன்ஸ் இராணுவத்தினர் கொன்றனர்.

அரசுக்கெதிரான இந்த கம்யூனிஸ்ட் கிளர்ச்சி அணி திருமதி. அக்கினோவின் கோரிக்கைகளைப் புறக் கணித்து சரணடைவதற்கும், சமரசத்துக்கும் மறுத்து வரு கின்றது.

இதே வேளை பிலிப்பைன்ஸ் இராணுவத் துருப்புகளும் கம்யூனிஸ்ட்டுகளுடனான மோதல்களில் அதிகளவில் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்க்கோஸின் ஆட்சிக் காலத்தில் பெருமளவில் புதிய மக்கள் இராணுவ கிளர்ச்சி யாளர்கள் வேட்டையாடப் பட்டிருந்தனர். ஆனல் திரு மதி அக்கினோவின் ஆட்சியில் இவர்கள் மீதான தாக்குதல் கள் பரவலாக இல்லாத போதிலும் அக்கினோ அரசு இந்த கம்யூனிஸ்ட்டுக்கள் குறித்து விழிப்பாகவே இருந்து வருகின்றது.

சுமார் 800 பேர் கடந்த பெப்ரவரி மாதம் முதல் பிலிப்பைன்ஸில் கொல்லப் பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (கி)

## பாகிஸ்தான் சபாநாயகர் பதவி நீக்கம்

இஸ்லாமாபாத்,மே 27

பாகிஸ்தான் சபாநாயகர் பெக்காய் இமாம் பதவி விலக் கப்பட்டுள்ளார். இவரைப் பதவி நீக்குவதற்கான தீர்மா னம் 152 க்கு 72 வாக்குகள் என்ற வித்தியாசத்தில் நிறை வேற்றப்பட்டது.

ஆளுங் கட்சிக்கு எதிராக சுயேட்சை உறுப்பினர்களையும் ஏனைய சிறிய கட்சிகளையும் சபாநாயகர் இமாம் ஊக்கு வித்துவருகிறார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்தே இவரைப் பதவி நீக்கஞ் செய்யும் தீர்மா னம் கொண்டு வரப்பட்டது. பாகிஸ்தான் பிரதமர் மொஹமட் கான் ஜுனேயோ இப் பதவிநீக்கல் தீர்மானத் தைக் கொண்டு வந்திருந்தார்.

பதவி நீக்கப்பட்ட சபாநாய கர் இமாம் தம் மீதான நடவ டிக்கை பற்றிக் கருத்து வெளி யிடுகையில் தாம் ஜனநாயக பாரம் பரியங்களுக்கு அமை யவே நடந்து கொண்டதாகத் தெரிவித்தார். (கி)

## ‘ஸ்போட்ஸ் எய்ட்’ 15 கோடி டாலர் சேகரிப்பு!

நியூயோர்க்,மே 27

ஆபிரிக்க பட்டினி நிவாரண நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட் டிருந்த ‘ஸ்போட்ஸ் எய்ட்’ சர்வதேச ஓட்டப்பந்தய மூலம் 15 கோடி டாலர்கள் நிதி உல கம்முழுவதும் இருந்து சேகரிக் கப்பட்டுள்ளது சுமார் 2 கோடி மக்கள் இந்த ‘ஸ்போட்ஸ் எய்ட்’ நிகழ்ச்சிகளில் பங்குபற் றினர்.

80 நாடுகளிலுள்ள 250 நக ரங்களில் இந்த ‘ஸ்போட்ஸ் எய்ட்’ பந்தயங்கள் நடத்தப் பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

இதே வேளை ஆபிரிக்கப் பட் டினி நிவாரண உதவிகள் தொடர்பாக ஐ. நா. ஸ்தாப னத்தில் விசேட கூட்டத் தொடர் ஒன்று ஆரம்பமாகி யுள்ளது. இக் கூட்டத் தொட ரில் ஆபிரிக்க நாடுகளுக்கு கூடு தல்உதவிகளை ஐ.நா.வழங்குவ துடன் அங்கத்துவ நாடுகளை யும் உதவிகள் வழங்கத் தூண் டும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராசரத்தினம் இரவீந்திரகுமார்**

மலர்வு: 04-11-1961

உதிர்வு: 07-06-1985

திதி: 28-06-1986

எங்கள் குடும்பத்தின் அணையா ஒளிவிளக்கே ! ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட அன்புச் செல் வமே நீ எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உன் நினைவு எம்மை விட்டகலா.

அம்மா, அப்பா,
சகோதரர்,
சகோதரிகள், அண்ணி,
மைத்துனர்,
மருமக்கள்.

(C 2541)

## விபத்தில் சிக்கிய இருசிறுமிகள்

[யாழ்ப்பாணம்]

பாடசாலைக்குச் சென்ற சிறுமிகள் தனியார் போக்கு வரத்து வாகனத்துடன் மோதுண்டதால் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை முத்திரைச் சந்தையருகில் நடைபெற்ற இவ்விபத்தில் விசுவநாதன் ஜானுதி [வயது 11], விசுவ நாதன் தர்மினி [வயது 6] ஆகிய இரு சகோதரிகளே காயமுற்றவர்களாவர். இத னல் இப்பகுதியில் சிறிதுநேரம் போக்கு வரத்து தடைப்பட் டது. [ஜ]


வலி-கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர்

**சம்பள அளவுத் திட்டம் - 101.6**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங் கள் யாவும் 05-06-86ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால்மூலம் ‘‘தலைவர், வலி-கிழக்கு, தென்பகுதி பலநோக்குக் கூட் டுறவுச் சங்கம், நீர்வேலி’’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்ப உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் ஒன் றினை ரூபா 1/- செலுத்தித் தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

800/- — 1250/-

சம்பள விகிதம்:- 40/- x 5—50/- x 5.

வயதெல்லை:- 23—50 வரை (சங்கப் பணியா ளர்களுக்கு வயதெல்லை கவனிக் கப்படமாட்டாது.)

கல்வித்தகைமை:-

(அ) முகாமை/மேற்பார்வைப் பதவிகளில் 7-வது சம்பள அளவும் திட்டத்தில் 3 வரு டத்திற்குக் குறையாத அனு பவமுள்ளவர்கள் அல்லது முகாமை/மேற்பார்வைப் பதவிகளில் 8-வது சம்பள அளவுத்திட்டத்தில் 6 வருட கால அனுபவமுள்ள கூட்டு றவுப் பணியாளர், அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகை மைகளும், முகாமைப் பதவி யில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறு வனத்தில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது

[இ] கூ.ப.த. பத்திரம் [உயர் தரம்]/க. பொ. த. ப.[உயர் தரம்] பரீட்சையில் 3 பாடங் களில் சித்தியும், அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/கைத் தொழில் நிறுவனத்தில் முகாமையாளர் பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

(ஈ) மேற்குறிப்பிட்ட தகைமை கள் முழுமையாக இல்லாத விடத்து,பூரணமையான அனு பவம் அல்லது விசேட தகை மைகள் கவனத்தில் எடுத் துக்கொள்ளப்படும்.

தலைவர்.

நீர்வேலி, 1986-05-20. [A 684]


யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கு கலாசாலைவீதியை சேர்ந்த அம்பலவாணர் இராசையா என்பவரின் மரணசாதனமில்லா சொ த்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன இல. 3946

நியாயாதிக்கம்

இராசையா கைம்பெண் தங்கரத்தினம், கலாசாலை றேட்டு, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொ ண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொ டுக்கப்பட்டு, அதில் அதற் கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத் தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டுவைகாசி மாதம் 16ந் திகதி முற்பகல் 9-30 மணி க்கு இந் நீதிமன்றத்தின் முன் னர்தோன்றி அவ்வாறு பதியப் பட்ட பின்னுறுதிக கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலா காதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவை ப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,

1986-03 05 பதிவாளர்.

16-05-86

காரணம் காட்டும் திகதி 20-06-86 வரை நீடிக்கப்பட் டுள்ளது.

கு. குலசிங்கம்,

பதிவாளர்.

ஆர். சிவசுப்பிரமணியம்,

சட்டத்தரணி. (C 2431)


நீங்கள் சுவைத்துப் படிப்பதற்கு “சிரித்திரன்”



கே:- எது போலிப்பாசம்?

ப:- இக்கரையில் மாழ்பவனுக்காக அக்கரையில் போய் இருந்துகொண்டு கண்ணீர் கயிறு விடுவது

கே:- இளம் பெண்களுக்கு நீங்கள் கூறும்புத்தி மதி என்ன?

ப: நண்டுபோல் நரியுடன் நிலவுபார்க்கப்போகக் கூடாது.

★ மகுடி பதில்கள் ★ நிலைக்கண்ணாடி
★ டாக்டரின் டயறியிலிருந்து ★ சிறுகதை

இன்னும் பல சுவையான விடயங்களுடன் இபபோது விற்பனையாகின்றது வைகாசிமாத இதழ்.

விபரங்களுக்கு;

சிரித்திரன்

550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 2532)



பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

டென்மார்க் செல்பவர்களுக்கு இலவசமாக பொன்ட் செய்து கொடுக்கப்படும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

குறிப்பு: எமது முகவர் ஜூன் 1ந் திகதி டென்மார்க் அழைத்துச் செல்வார். A706


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி கந்தசாமி கவிப்பிரியா (கவினு)

சரவணை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி விருத்த சலாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வி கவிப்பிரியா [கவினு] 19-05-1986 அன்று தனது முதலாவது பிறந்ததினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடினுர்.

C 2400



## அதிர்ஷ்டலாபச் சீட்டு

மல்லாகம்-குளமங்கால் சனசமூக நிலைய கட்டிட நிதிக்காக 25-5-86 அன்று குலுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1-வது பரிசு | 357 |
| 2-வது பரிசு | 225 |
| 3-வது பரிசு | 1380 |
| 4-வது பரிசு | 1650 |
| 5-வது பரிசு | 1376 |
| 6-வது பரிசு | 1316 |

ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 1136 | 829 |
| 1544 | 1948 |
| 1036 | 1001 |
| 1402 | 901 |
| 1059 | 1542 |

இப்படிக்கு
நிர்வாகிகள்
[C25 61]



வெலிங்டன

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

**விதி**

(கலர் - புதிய பிரதி)



லிடோ இன்று முதல்

தினசரி காலை 10-30, 2-30 மாலை 6-30

முத்துராமன். சுஜாதா நடித்த

**மயங்குகிருள் ஒரு மாது**

[புதியபிரதி-கலர்]



லிபேட்டி சினிமாவில்
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்

துப்பாக்கிவீரன்
James Coburn
கவர்ச்சி அழகி
Sophia Lorene
நீக்ரோ அழகன்
Jim Brown நடித்த
FIRE POWER

5 பதக்கங்கள் பெற்ற மாபெரும் வெளியீடு.

10-00, 2-15, 4-15, 6-30

வயது வந்தவர்களுக்கு மட்டும்


# புறக்கோட்டைக் கடையில் இருவர் கொலை

## வெடிமருந்தின் எதிரொலி

[கொழும்பு]

கொழும்பு புறக்கோட்டை 4-ம் குறுக்குத் தெருவிலுள்ள கடையொன்றினுள் இருவர் கொலைசெய்யப்பட்டுக் கிடந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புவந்த லொறியொன்றினுளளிருந்து கண்டுபிடிக்கப்பட்ட 5 கிலோ எடையுள்ள வெடிமருந்துக்கும் இந்தக் கொலைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உள்ளதா எனப் பொலிஸார் விசாரணைசெய்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு பொலிஸ் பார்க் அருகில் வீடொன்றில இருந்து கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 400 ஜெலிக்நைட் ரக வெடிமருந்து, இம்மாதம் 3-ம் திகதி நடைபெற்ற எயர்லங்கா குண்டு வெடிப்புக்குப் பயன் பயன்படுத்தக் கொண்டுவரப் பட்டிருக்கலாம் எனவும், ஆயினும் சில பிரச்னைகள் காரணமாக இது பாவிக்கப்படமுடியாமல் இருந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனராம். அத்துடன் முன்னுள் தூதுவரின் மகஞன திரு மாணிக்கலிங்கமே எயர்லங்கா விமானத்துக்கு உபயோகப் படுத்தப்பட்ட குண்டைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [செ]

# காசோலை மாற்றச்சென்றவர் சுடப்பட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிபர் காசோலை மாற்றச் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ. குமாரசாமி (62 வயது) என்பவரே பலியானவராவார். இவரது மரணம் பற்றி யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் விசாரணை நடத்தினுர்.

இம்மாதம் 19-ம் திகதி தேசிய சேமிப்பு வங்கியில் காசோலை மாற்றச் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர் என்று சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. [க]

# 9 பிள்ளைகளின் தாயும் 2 வாலிபரும் சுட்டுக் கொலை

[திருகோணமலை]

அகதிகள் முகாமிலிருந்து வீடு பார்க்கச் சென்ற 9 பிள்ளைகளின் தாய் ஒருவரும் இரு ஆண்களும் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தம்பலகாமம் சூரங்கல் என்னுமிடத்தைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் [45 வயது], இவருக்குத் துணையாகச் சென்ற குட்டி (20 வயது], லிங்கேஸ்வரன் [24 வயது) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

தம்பலகாமம் பகுதியில் கடந்த 85 நவம்பரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது அகதிகளாக்கப் பட்டுக் கிண்ணியா அகதி முகாமில் இருந்த இந்த மூவரும் சூரங்கல் கிராமத்திலுள்ள தங்கள் வீடுகளைப் பார்வையிடுவதற்குச் சென்ற சமயமே இக்கதி நேர்ந்தது. [மா]


## வெளிநாட்டுப் பிரயாணம்

டென்மார்க் செல்ல விரும்புவர்களும் மத்தியகிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாக பணியாற்ற விரும்புவர்களும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

மல்ரி சேவிசஸ்,
37 (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி),
யாழ்ப்பாணம்.

[C2529]


# "தமிழர்படும் துன்பங்களை எடுத்து விளக்கினுர்'சரத்'"

— 'அநீதி ஒழிப்பு ஒன்றியம்'

(யாழ்ப்பாணம்)

"விடுதலை கோரும் தமிழ் மக்களுக்கு அரசு திட்டமிட்டுச்செய்துவரும்கொடுமைகளை பாராளுமன்றத்துக்கூடாக சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்திய ஒரேஒரு எதிர்க்கட்சி மனிதராக சரத்முத்தெட்டுவேகம விளங்கினுர்."

இவ்வாறு கலவானதொகுதி எம். பி. சரத்முத்தெட்டுவேகமவின் மறைவு குறித்து 'அநீதி ஒழிப்பு ஒன்றியம்' வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"சரத் ஒரு பிறவிக் கம்யூனிஸ்ட் இரத்தினபுரி-குருவிற்றவிற் பிறந்த இவர் ஏழைக் கூலி - விவசாய - தேயிலைத் தோட்ட மக்களுக்கே தனது சேவையை அர்ப்பணம் செய்தவர்.

"இந்நாட்டில் சிங்கள மக்களுக்கிருக்கின்ற சகல உரிமைகளும் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்திலும் அரசியல் மேடைகளிலும் முழங்கியசமதர்மவாதி இவர்." (ஐ)


## அமரர் ஜீ. ஜீ.

அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலுருவாக்க வேண்டுமென்ற நோக்குடன் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுப்பதற்காக 8-6-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு கீழ்க்காணும் விலாசத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பெறுகின்றது. மேற்படி நோக்கத்தில் அபிமானமும் ஆதரவுமுடையவர்கள் அன்புடன் வரவழைக்கப்படுகின்றனர்.

"வைரவர் கடாச்சம்"
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு அருகாமையில்]

சோ வன்னியசிங்கம்.
C 2522


# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி 14 (1986-5-28)
கிழமை-புதன்
திதி- பஞ்சமி பி.ப. வரை
நக்ஷத்திரம்- உத்தராடம் மு.ப.வரை

மேடம்: சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித் தரும். மதத் தொடர்பான காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

இடபம்: துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள். சிலர்வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படலாம். கணவன் மனைவி உறவு காரசாரமாக இருக்கும்.

மிதுனம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் காதல்வாழ்விலும் தித்திப்பான சம்பவம் இடம்பெறும்.

கடகம்: மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன் மூலம் கைகலப்பு ஏற்படலாம் உடல் நலமும் குன்றும்

சிங்கம்; இதயப் படுதாவில் இன்பத்தின் மின்னல் பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும்.

கன்னி: தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தலைதூக்கும். ஏமாற்றத்துக்கும் இடமுண்டு அவதானம் வேண்டும்.

துலாம்: அதிர்ஷ்ட கரமான தினம் சிலருக்கு எதிர் பாராத வரவுக்கும் இடமுண்டு தொழில் புரியும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்

விருச்சிகம்: தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவர்கள் சிறு சச்சரவுக்கும் இடமுண்டு.

[6ம் பக்கம் பார்க்க]


## நினைவாஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
8-5-1967
ஆழ்பவன் அளிப்பு:
17-5-1986

புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த [ஆலடி] நா. அரிகரன் [அரி] 17-5-86 அன்று காவலூரில் அரச கூலிப்படைகளுக்கும் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலின்போது வீரமரணமெய்தினுர். அன்னுரின் இறுதிக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. அன்னுரின் மறைவு குறித்து மிகுந்த கவலையில் ஆழ்ந்துள்ள

நண்பர்கள்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

[2555]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் குறைந்த செலவில் அழைத்துச் செல்வார்.

5-6-86-ல் Denmark செல்ல விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

V.M. Balasingam,
Hotel Orchid Inn,
571/6 Galle Road,
Wellawatte.

உடனடியாகப் பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதியில் கிளீனர் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

★ குவைத்தில் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் துரிதகெதியில் செய்துதரப்படும்.

GROUP ATLANTIC

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக] (A 710)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஈழநாடு**
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 28-5-86

# குடிபெயர்ந்த 950 குடும்பங்களுக்கு ஒருவார இலவச உணவுப்பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவில் வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்த 950 குடும்பங்களுக்கு ஒருவார காலத்துக்கு இலவச உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இத்தகவலை யாழ். அரச அதிபர் திரு. எம். டஞ்சலிங்கம் தெரிவித்தார்.

யாழ். இராணுவ முகாமை அண்மித்த கொட்டிப்பகுதியைச் சேர்ந்த 200 குடும்பங்களும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 400 குடும்பங்களும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 350 குடும்பங்களும் இந்த நிவாரண உதவியைப் பெறுவர். (மா)

## இவர்கள் இன்றுகூடி ஆராய்வர்

யாழ்ப்பாணம்]

பாதுகாப்பற்ற சூழ்நிலையில் யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் கடமை புரியவேண்டியுள்ளமை குறித்து ஆராயுமுகமாக யாழ். மாவட்ட அரசசேவை தொழிற்சங்க இணைப்புக்குழுக் கூட்டம் இன்று பிற்டகல் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [பி]

## வேலணை - அராலிவீதி: நாளை ஆலோசனைக் கூட்டம்

[வேலணை]

வேலணை -அராலி வீதியைப் புனரமைப்புச் செய்வது பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டமொன்று நாளை வியாழக்கிழமை கலை வேலணை வங்களாவடியில் நடைபெறவுள்ளது.

இவ்ஆலோசனைக் கூட்டத்தில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது நலவிரும்பிகளுட்படச் சகல பொது மக்களையும் கலந்துகொண்டு தங்களது ஆலோசனைகளை வழங்குமாறு ஊர்காவற்றுறை தேவமாதா ஆலய பங்குத்தந்தை அருட்திரு கிருபானந்தன் அடிகளாரும் ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. நா நாகராசாவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஆனையிறவில் லொறிகள்மீது தீவிர சோதனை

(கிளிநொச்சி)

மீண்டும் ஆனையிறவு இராணுவ முகாமின் முன்பாக உள்ள தடை முகாமில் லொறிகள் மீதான சோதனை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது

இச் சோதனைகளைப் பொலிஸாருடன் சேர்ந்து இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகிறார்கள். லொறிகளில் ஏற்றிவரப்படும் சகல பொருள்களும் கீழ் இறக்கப்பட்டு மிகவும் நுணுக்கமான முறையில் சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதன் காரணமாக இந்த லொறிகள் ஆனையிறவில் சில மணி நேரம் தரித்து நிற்க வேண்டி ஏற்படுகிறது.

இதேவேளை பிரயாணிகள் வாகனங்கள் மீதான சோதனைகள் மிக வேகமாக நடைபெறுகின்றன. இச் சோதனைகளைப் பொலிசாரே மேற்கொள்கின்றனர்.

## மின்சாரம் தாக்கி மரணம்

[மாவிட்டபுரம்]

அகத்தி மரத்தில்ஏறி கிளையொன்றைவெட்டியவர் அக்கிளை உயர் சக்தி மின்கம்பியில் படவே மின்சாரத்தால் தாக்குண்டு வீழ்ந்து மரணமானார்.

வீமன்காமத்தில் நடந்துள்ள இச்சம்பவத்தில் விசுவலிங்கம் சுரேந்திரன [37 வயது] என்பவரே இறந்தவராவார்.

இவர்3 பிள்ளைகளின் தந்தையாவார்.

## நுண்கலைப் பீடத்தில் இன்று நடைபெறும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இன்று புதன்கிழமை கலை கழகக் கலை மண்டபத்தில் நதஸ்வர தவில் பற்றிய கருத்தரங்கு நடைபெறும். இக் கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு ஈழத்தின் பிரபல தவில் மேதையான திரு. என் ஆர் சின்னராஜாவும் பிரபல நாதஸ்வர விற்பன்னர்களான திரு. எம். பி. பாலகிருஸ்ணன், திரு. வி. கே. கானமூர்த்தி, திரு. வி கே. பஞ்சமூர்த்தியும் கலந்து விளக்கவுரை ஆற்றுவதோடு செயல் முறையில் பல அரியவிஷயங்களைச் செய்தும் காட்டுவார்கள்.

இராமநாதன் நுண்கலைப் பீடக்கவின் கலை மன்றச் சார்பிலும் விரிவுரையாளர்கள் சார்பிலும் இந் நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுளளது.

## எரிந்த நிலையில் மேலும் இரு சடலங்கள்

(பச்சிலைப்பள்ளி)

புதுக்காட்டுச் சந்திக்கு அண்மையிலும் இரு ஆண்களின் சடலங்கள் எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

புதுக்காடு மருதங்கேணி வீதிக்கு அண்மையிலுள்ள பற்றையோரத்திலேயே எரிக்கப்பட்ட இருசடலங்களும் காணப்பட்டன

இதற்கு முன் கட்டைக் காட்டில் ஓர் ஆணின் சடலம் எரிந்தநிலையில் கண்டுபிடிக்கப் பட்டது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தினரின் மனிதனும் மிருகமும் என்ற நாடக நிகழ்ச்சி இன்று பி. பகல் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (பி)

## அகதிகள் புனர்வாழ்வு கலைவிழா

[யாழ்ப்பாணம்]

அகதிகள் புனர்வாழ்வுக்காக கலைவிழா நிகழ்ச்சியொன்று பேரசிரியர் கா சிவத்தம்பி தலைமையில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இம்மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது. [ஐ]

### பயங்கரவாதத்தை...

ல்ட் பொப்பலஸ் ஏதென்ஸ்ல் மேற்கண்டவாறு வாக்குறுதி அளித்தார்.

கிரேக்கஅரசின் அழைப்பை ஏற்று திரு. டிரோன்பெர்ணண்டோ அங்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். [வா]

### மட்டக்களப்பில்...

[1ம பக்கத தொடர்ச்சி]

லின்போது கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டதன் 31-வது நாள் அஞ்சலி செலுத்துமுகமாகவே இக் குண்டுகள் அடுத்தடுத் வெடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுசம்பந்தமாகத் தமிழீழவிடுதலைப் புலிகளின் அஞ்சலி சுவரொட்டிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தல் ஆங்காங்கே காணப்பட்டன

நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படாதிருந்த போதிலும் மட்டக்களப்பிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாததால் வகுப்புகள் நடைபெறவில்லை. கடைகள் திறந்திருந்தும் போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்றிருந்தும் நகரம் களைகட்டவில்லை. (மா)

### நிலைமை சீராகும்...

(1ம பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒருவாரப் போரின் பின் கந்தோரிலும் சுற்று வளவிலும் கண்ணிவெடிகள், குண்டுகள், போர் ஆயுதங்கள இல்லையென்று நிச்சயமாகும்போது,

இரு போர்ப் பிரிவினரும் எங்கள் வேலைநேரத்தில் முன்னேறிப் போர் தாக்குதல் ஆரம்பிப்பதில்லை என்ற உத்தரவாதம் பெறும்போது,

நாங்கள் அங்கு நிச்சயமாக வேலை செய்வதற்கு வருகிறோம். வேலை செய்யவும் தங்கள் வேலைக்குரிய வேதனத்தைப் பெறவுமே நாங்கள் விரும்புகிறோம்.

### இன்றைய...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம். வணிகத் துறையில் நீங்கள் எதிர்பார்த்ததை விடஅற்பலாபம் கிடைக்கும். குழந்தை யொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

மகரம்; சமயோசிதமான நடவடிக்கை மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் அமைதி நிலவும். பேச்சில் நிதானம் நன்றி

கும்பம்: எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக் கூடும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு.

மீனம்: கல்வித் துறையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்சிகரமான தினம். வாகன. சுகமும் உண்டு.

**திருமலை**
**வே. ரவிந்திரன்**

### யாழ்.கச்சேரி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குடும்பங்கட்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகளை வழங்க திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மறுத்துள்ளதாகவும், இதனை ஆட்சேபித்தே இன்றைய ஊர்வலம் நடைபெறுவதாகவும் தெரிகிறது.

அரச அதிபரிடம் இவர்கள் மகஜர் ஒன்றைச் கையளிப்பர் அண்மைக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினுல் திருகோணமலைப் பகுதியிலிருந்து டிபெயர்ந்து வந்த அகதிகளே இவ் ஊர்வலத்தை நடத்துகின்றனர். [ரா]

### காரைநகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியாவசியப் பொருட்களை மட்டுமே இவ்வழியால் எடுத்துச் செல்லமுடியும்.

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் யாழ்ப்பாணம் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி மேலதிக அரசாங்க அதிபர்கள், ஊர்காவற்துறை, வேலணை, நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர்கள், உதவி உணவுக்கட்டுப் பாட்டதிகாரி, கணக்காளர் ஊர்காவற்துறை, வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கங்களின் பொது முகாமையாளர்கள், தலைவர்கள்,மற்றும் சில முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### முஸ்லிம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் வைத்துப் பொதுமக்களிற் சிலர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்திருந்ததாகவும் அவ்விடயம் அக்கடை வர்த்தகருக்குத் தெரியவந்ததைத்தொடர்ந்து அவர் வாடகைக்க ரொன்றை அமர்த்திக் கொண்டு மற்றும் 5 பேருடன் நேற்று முன்தினம் இரவு 8-30 மணிக்கு சந்தேகநபரைப்பிடிப்பதற்கு ஒட்டமாவடி நோக்கிச்சென்றார். சந்திவெளி அதிரடிப்படையினரின் முகாமைக் இக்கார் தாண்டிக்கொண்டிருந்த பொழுது முகாமிலிருந்து சரமாரியாகக் காரை நோக்கித் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. பலியான மூன்று பேரின் சடலங்களும் அதிரடிப் படை முகாமில் வைக்கப்பட்டன படுகாயமடைந்த மற்றைய மூவரையும் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு அதிரடிப்படையினர் எடுத்துச் சென்றனர். நேற்றுக்காலை அம்மூவரும் மட்டக்களப்புஆஸ்பத்திரிக்குக் சொண்டுசெல்லப் பட்டனர்.

பலியான மூவரின் சடலங்களும் அதிரடிப்டடை முகாமில் வைத்தே பிரேத பரிசோதனை செய்யப்பட்டன. இச் செய்தி அச்சுக்குப்போகும் வரை உறவினரிடம் சடலங்கள் ஒப்படைக்கப்படவில்லை.

இச்சம்பவத்தை யொட்டி அஞ்சலி செலுத்துமுகமாக கல்முனைப்பகுதி எங்கும் கடைகள் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

**அரசு அறிவிப்பு**

இதேவேளை கல்முனையில் பாதுகாப்புப்படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலொன்றின் போது மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது. (மா)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை பரமநாதன் - மானிப்பாய்

மானிப்பாய் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பரமநாதன் (மாஸ்டர் திருகோணமலை பன்குளம்) 27 5-1986 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் R தம்பிப்பிள்ளை - திருமதி சிவக்கொழுந்து தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புமகனும், P. இராஜகுமாரியின் அன்புக்கணவரும், T திருநாவுக்கரசு, T ஞானசுந்தரம், சிவபாதசுந்தரம், தங்கராஜா, சுப்பிரமணியம் ராஜகமலம், காலஞ்சென்ற லெட்சுமிதேவி ஆகியோரின் சகோதரருமாவார். இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிகு அவரது இல்லத்தில் நடைபெறும்.

த. சுப்பிரமணியம்.
லோட்டன் வீதி, மானிப்பாய். (C 2554)

### கந்தையா - வன்னித்தம்பி (இராசா)

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கந்தையா - வன்னித்தம்பி அவர்கள் 27 - 05 - 86 அன்று சிவபதமடைந்தார். அன்னார் பூரணத்தின் அன்புக்கணவரும், தில்லைநடராசா [வேலைப்பரிசோதகர் கச்சேரி, வவனியா], யசோதராதேவி [சுருக்கெழுத்தாளர் மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்], சிறிஸ்கந்தராசா [சுவிஸ்] ஆகியோரின் தகப்பனுரும் சிவசுந்தரம் [ஜெயிலர் சிறைச்சாலை, மட்டக்களப்பு], இராசமலர், ஆகியோரின் அன்புமாமனுருமாவார் அன்னரின் இறுதிக்கிரியைகள் 28 - 05 - 86 புதன்கிழமை பிறபகல் 1 மணிக்கு கீரிமலையில் நடைபெறும்.

தகவல்: வ. தில்லைநடராசா,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.
[C 2556]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org